
# போர்வாள்

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B. A. (Hons.)

தனி இதழ் அணா 1½
வெளிநாடு அணா 2

வாள் 1 | சென்னை 8—11—47 சனிக்கிழமை | வீச்சு 13




## தமிழாசிரியர் துக்க வாரம்

வறுமைத் தேள் கொட்டுகிறது தமிழாசிரியர்தம் குடும்பங்[..]—நீண்ட நாட்களாக! மீட்கவோ யாரும் முன்வரவில்லை. [..]ரும் என்றாலும் சர்க்காரும்கூடத்தான். ஆசிரியர் குழு, அமைச்[..] அவினாசியாரைப் பார்க்கும்போதெல்லாம், பொறுங்கள் [..]பை நிறையட்டும் என்கிறாராம். பை நிறைவதெப்போது? [..]ரியர் துயர் தீர்வதெப்போது? கடலலை ஓயட்டும்—குளித்து[..]ழுந்துகிறேன் என்றால் அது ஆகிற காரியமா? எனவேதான் சென்[..] தமிழாசிரியர் துக்கவாரம் கொண்டாடுகின்றனர் நவம்பர் [..]தல் 16 வரை. அடுத்து, நேரடி நடவடிக்கைக்கும் தயாராய் [..]னராம். தம்மை வாழ்விக்கும் அவினாசியார் தமிழாசிரியரை [..]ழவிக்க ஒவ்வாதது ஏனோ?

## திராவிடக் கழனியில் ஆரியக் கள்ளியா?

திராவிடக் கழனியில் ஆரியக் கள்ளியொன்று முளைத்து வளர இடங் கொடுக்கலாமா என்று கேட்டால் தன்மான உணர்வுடையார் எவரும் கூடாது என்றுதான் கூறுவர். ஆனால் சென்னை பச்சையப்பன் அறநிலையத்தினர் இடங் கொடுக்கலாம் என்கின்றனர்; கொடுக்கவும் போகின்றனர்.

ஆரியத் தோட்டத்தில் திராவிடச் செடிகள் தாமாக முளைத்தெழுந்து வளர்ச்சியுற்றாலும் அவை அடியோடு கல்லி யெறியப்படும், கொடு நினைப்புடைய ஆரியத்தால். ஆனால் இன உணர்ச்சி அற்ற திராவிடரில் பலர் மட்டும், எங்கோ உள்ள புற்றில் உலரும் ஆரிய நச்சரவங்களை வலிய அழைத்துவந்து தம் பூந்தோட்டத்தில் குடியேற்றவும், அவற்றிற்குப் பாலும் தேனும் பதமுற ஊட்டி வளர்க்கவும், அவை கிடத்தற்குப் பஞ்சு மெத்தைகள் அமைத்துக் கொடுக்கவும் தயங்குவதில்லை. எவ்வளவுதான் பரிவுடன் பாலூட்டி வளர்த்தாலும் வளர்த்தவர்மீதே சீறிப் பாய்வது பாம்பினத்திற்கே பொதுவிதி. ஆரிய அரவங்கள் இந்த விதிக்கு விலக்கல்ல. இது தெரிந்தும், ஆரியம் அவ்வப்போது தன் கழுத்தையே நெரிக்கவும் முந்தியிருக்கிறது என்பதை அறிந்தும், ஏனோ தெரியவில்லை, பச்சையப்பன் அறநிலைய உறுப்பினர் பலர்க்கும் ஆரியர்பால் அடிக்கடி காதல் பிறக்கிறது. காதலுக்குக் கண்ணில்லை காலும் இல்லை என்னும் பழமொழி இவர்களை நோக்கித்தான் எழுந்தது போலும்!

சில ஆண்டுகளுக்கு முன்பு டி. எஸ். சர்மா என்னும் ஓர் ஆரியரை பச்சையப்பன் கல்லூரித் தலைவராகத் (Principal) தேர்ந்தெடுத்தவர்கள் இந்த ஆண்டும் மற்றுமோர் ஆரியருக்கு முடிசூட்ட முனைந்துவிட்டனர் என்று தெரிகிறது. என்ன கொடுமை! திராவிடர் பணத்தில், திராவிடர் பொறுப்பில், திராவிடர் நாட்டில், திராவிடர் துணையில் நடைபெறும் ஓர் திராவிடக் கல்லூரிக்கு ஓர் ஆரியரா தலைவராவது! திராவிடமே! உன் தன்மானம் இவ்வளவுக்கா தாழ்ந்துவிட்டது!

ஆரியர் கல்லூரிகளில் திராவிடர்க்கு இடமுண்டா? மழைக்கேனும் ஒதுங்க் முடியுமா திராவிடர் அங்கு? ஆனால் திராவிடர் கல்லூரியில் மட்டும் ஆரியர்க்குத் தலைமை

பீடம்! எவ்வளவு அதிசயமான ஆனால் அவமானத்தனமான சேதி!

சென்னை 'ஹிந்து ஹைஸ்கூல்' ஓர் ஆரியப் பள்ளி. இதன் ஆசிரியர்கள் 76 பேரில் **ஆரியர் 73 திராவிடர் 3.** மூன்று என்றால் முதன்மையான பொறுப்புகளில் உள்ளவர்கள் என்று எண்ணிவிடாதீர்கள். ஒருவர் தமிழ்ப் புலவர்; ஒருவர் ஓவியப் புலவர்; ஒருவர் உடற்பயிற்சிப் புலவர். மூன்றும் "ஒதுக்கப்பட்ட இலாகா"க்கள்! தலைமை ஆசிரியர் அசல் ஆரியர்!

ஒரு மரம் தோப்பு ஆகுமா? ஏதோ ஓர் ஆரியப் பள்ளிக்கூடம் இவ்வண்ணம் இருப்பதாலேயே எல்லாப் பள்ளிகளும் இத்தன்மையனவே என்று சொல்லல் நீதியோ என்று எவரேனும் ஐயவினா எழுப்பலாம். அவர்கட்கு இதோ மற்றும் சில எடுத்துக் காட்டுகள்.

**சென்னை ஹிந்து தியாலாஜிகல் உயர்நிலைப்பள்ளி:** ஆசிரியர்தொகை 59 அதில் ஆரியர் 52. திராவிடர் 7. தலைமை ஆசிரியர் ஆரியர்தான். ஆனால் பள்ளி தொடங்கும்போது நன்கொடை தந்தவர்கள் திராவிடர்கள். இராமநாதபுரம் அரசர் கொடுத்தது ரூபா 15,000 அமரம்பேடு முனிசாமி முதலியார் கொடுத்தது ரூ. 20,000.

**பென்னாத்தூர் சுப்பிரமணிய அய்யர் உயர்நிலைப்பள்ளி, மைலாப்பூர்.** பள்ளி ஆட்சிக் குழுவினர் ஒன்பது பேர். அனைவரும் ஆரியர். ஆசிரியர்கள் 59 பேரில் மூன்றே மூன்று பேர் திராவிடர். பிறர் அனைவரும் பிராமணோத்தமர்கள், பூதேவர்கள், முகத்துதித்த மூதறிவாளர்கள், ஐயர்கள், ஐயங்கார்கள், சர்மாக்கள், சாஸ்திரிகள், இத்தியாதி இத்தியாதி! ஆட்சிக் குழுவினரும் ஆசிரியர்களும் மட்டுமல்ல மாணவர்களும் ஆரிய மயம். நூற்றுக்கு எழுபத்தைந்து ஆரிய மாணவர்கள்.

**தேசியக் கல்லூரி, திருச்சி:** "கல்கி" மேலட்டையை அலங்கரித்த கல்லூரி இது. ஆசிரியக் கூட்டம் 31-ல் திராவிடர் ஒரே ஒரு ஒத்தை மனிதர் "திருஷ்டி பரிகாரம்" போலும்! ஆட்சியாளர்கள் 15 ல் 12 ம், மாணவர்களில் நூற்றுக்கு எழுபத்தைந்தும் "தகுதியும் திறமையும் வாய்ந்த இனத்தின்" தனியுடைமை. கல்லூரித் தலைவராவது திராவிடராய் இருப்பாரோ என்று எண்ணுகிறீர்களா? இல்லை, இல்லை, அவரும் "அந்தச் சிறு கூட்டத்"தைச் சேர்ந்தவரே.

**விவேகாநந்தா கல்லூரி, சென்னை:** ஆரியமாவது திராவிடமாவது என்று நூல் எழுதுகிற நாமக்கல்லார்கள் இக் கல்லூரியைக் கண்டதும் தாம் எழுதியது அத்தனையும் தவறு என்று மனமார எண்ணுவர், அந்த அளவுக்கு ஆரியமே உருவான கலைபயில் கழகம் இது. கலைபயில் கழகமா? அல்ல, ஆரியத்திற்கு ஊட்டம் தரும் நீர் ஊற்று. மேலே சொன்ன ஆரியப் பள்ளிகளிலேனும் தப்பித் தவறி கொஞ்சம் கொஞ்சம் திராவிடத் தென்றல் வீசுகிறது. ஆனால் இக் கல்லூரியில் மருந்துக்கும் கிடையாது திராவிட இனத்தார். அலங்காரப் பேச்சல்ல இது, முழு உண்மை. ஆசிரியர்கள் 24 பேர். அதில் திராவிடர் யார்என்று தேடித் தேடிப் பார்த்தாலும் கிடைக்க மாட்டார்கள். இருந்தால் தானே கிடைக்க! திராவிட ஆசிரியர்கள் யாருமே கிடையாது! அனைவரும் பூசுரர்! அண்மையில் தான் திராவிட ஆசிரியர்—தமிழ்ப் புலவர் ஒருவர் இக் கல்லூரியில் இடம் பெற்றதாகச் சொல்கிறார்கள் (அது எவ்வளவு தூரம் உண்மையோ நமக்குத் தெரியவில்லை.) மாணவர்களில் நூற்றுக்கு 93 பேர் ஆரியர். ஆசிரியர் மாணவர் ஆட்சியாளர் மட்டுமல்ல, நூல் நிலையப் பொறுப்பாளர் ஒரு பார்ப்பனர். கல்லூரித் தலைவரும் அந்த இனத்தவர்தான்.

பட்டியலுக்குப் பஞ்சமில்லை—மேலும் மேலும் சொல்லிக் கொண்டே போகலாம் ஆரியக் கலைக் கூடங்களின் தன்மை பற்றி. ஆனால் தேவையில்லை. ஆரியத்தின் போக்கு தமிழர்க்குப் புதிதுமல்ல; சிலப்பதிகார காலத்திலிருந்து பெரியார் இராமசாமி காலம் வரை தம் உழைப்பால் உரம்பெற்று தம்மையே அழித்துவரும் அந்த நடமாடும் முதலாளித்வத்தை அறியாத தமிழருமில்லை. அறிவர் தமிழர் இதை. அறிந்துந்தான் ஆரியர்க்கு அரசுகட்டில் அமைக்கின்றனர். நம் உள்ளம் வெதும்புகிறது விவேகாநந்தர் கல்லூரியை ஒரு கணம் நினைத்துவிட்டு, பச்சையப்பன் கல்லூரியை மறுகணம் எண்ணிப் பார்த்தால். ஆனால் பச்சையப்பனின் ஆட்சியாளர்கள் இ[...] கண்டு வருந்துகின்றனரில்லை[...] வருந்துவதாயின் ஓர் ஆரியர்[...] கல்லூரித் தலைமை தருவரோ[...] தர ஒப்புமோ அவர் உள்ளம்!

பச்சையப்பன் அற நிலையத்[...]னரே! பணிவுடன் வேண்டுகிறோம்[...] கல்லூரிமீது கொண்ட பற்றி[...] வேண்டுகிறோம், திராவிடர் என்[...] பாசத்தால் கட்டுண்டு உம்[...] யாம் வேண்டுகிறோம், ஆரிய[...] அந்த முதல் நிலையில் நிறுத்தா[...] சில நாளைக்குத்தானே என்[...] சொல்லாதீர், "நல்லவர்தானே[...] நீண்டநாள் உழைத்தவர் தானே[...] இருந்தால்தான் என்ன தவறு" என்றெல்லாம் பேசாதீர், திரா[...]விட மாணவர்தம் உள்ளம் உடை[...]யச் செய்யாதீர், கல்வி நீரோடை[...] திராவிட வயல்களில் பாய்வதை[...] தடுக்காதீர், ஆண்டாண்டு தோறு[...] படிக்க வருகின்ற திராவிட மாண[...]வர்க்கு இதன் மூலம் தடை விதி[...]காதீர், தமிழர் வாழ்வு தழைய[...] வண்ணம் செய்யாதீர், தாங்கரி[...] பழி தன்னைத் தாங்காதீர், இன[...] உணர்ச்சி படைத்த ஓர் திராவிட[...]ரிடம் கல்லூரித் தலைமையைக் கொடுத்திடுவீர், அதுவே அறவழி[...]யாகும். திராவிடம் வாழும் வழி[...]யும் அதுவே ஆகும்.

---


## விற்பனையாளர்கள் தேவை!

★

கீழ்க்கண்ட ஊர்களுக்கு முன் பணம் கட்டக்கூடிய விற்பனை யாளர்கள் தேவை.

செங்கற்பட்டு
மதுராந்தகம்
கோயம்புத்தூர்
ராமநாதபுரம்
திருவள்ளூர்
தென்காசி
பொள்ளாச்சி
மணியாச்சி
மானாமதுரை
திருவத்திபுரம். (வ. ஆ.)

# "நான் ஓர் செல்லாத காசு!"

## 1

கிராமங்கள் மிக நிறைந்த ந்தியாவுக்கு டெக்ஸ்டைல் கள்—நெசவாலைகள் விஷம் ான்றவை, கதர் ஒன்றே இந்தி வில் இராமராஜ்ய ஆட்சியை வ வல்லது. இந்திய மக்கள் ல்லோருக்கும் ஆடை அளிக்க ர் இயக்கத்தால் முடியாது ன்று சிலர் எண்ணுகின்றனர். து மில்களின் சூழ்நிலையால் ற்பட்ட எண்ணமே தவிர ண்மையல்ல.

—காந்தியார்

மில்கள் பூராவையும் எடுத்து ட்டு, எல்லோருக்கும் கதர் ளை செய்யப் போகிறோம் ன்று சொல்வது வெறும் பைத் க்காரத் தனமாகும். எல்லா க்களுக்கும் வேண்டிய துணி ப சப்ளை செய்வதற்கான நிலை மயில் கதர்த் திட்டம் எப்போ மே வரமுடியாது.

—"தினசரி"

## 2

அஹிம்சா தர்மமே இந்தியா ற்குச் சுயராஜ்யத்தை வாங்கிக் காடுத்தது. எந்த நிலையிலும் ஹிம்சையைக் கடைப் பிடிப் தே நம கடமை; அஹிம்சைக் த் தோல்வி என்பதே கிடை ாது. என்றும் அஹிம்சையே வல்லும்.

—காந்தியார்

கையாலாகாத் தனத்தால், காழைத் தனத்தால் இவ்வளவு லமாக அஹிம்சையைப் பின் ற்றிவந்தோம். வல்லமை பொ ந்திய பிரிட்டிஷ் சர்க்காரை ம் பலாத்காரத்தால் என்ன சய்துவிட முடியும் என்ற நிர்க் தியான நிலைமையில் அஹிம்சை என்று பாசாங்கு செய்துவந் தோம். ஆனால் அந்தக் கொள் கை இனி சாத்தியமா என்பது நன்றாக யோசித்து முடிவு கட்ட வேண்டிய விஷயம்.

—பாரத தேவி

அஹிம்சை அஹிம்சை என்று உதட்டளவில் பேசிக் கொண்டிருப்பதில் இனிப் பிர யோசனமில்லை, வாளுக்கு வாள் வெட்டுக்கு வெட்டு என்று போனால்தான் இனிக் காரியம் நடக்கும்.

—சர்தார் படேல்

பாஞ்சாலத்திலும் வங்காளத் திலும் இனியும் வெறியர்கள் மைனாரிடிகளைத் தொந்திரவுசெய் தால், இதர பகுதிகளில் உள்ள வர்களின் கைகள் பூப்பறித்துக் கொண்டிராது.

—ஆச்சார்ய கிருபாளினி

## 3

கூடிய சீக்கிரம் உணவு உடை கட்டுப்பாடுகளை எடுத்துவிட வேண்டுமென்று நான் வற்புறுத் திக் கூறுகிறேன். மோசடி, உண்மை தெரியாமல் பதுக்கு வது, கள்ள வாணிபத்தை அதி கரிப்பது, செயற்கைப் பஞ்சத் தைத் தோற்றுவிப்பது முதலிய எல்லாக் காரியங்களுக்கும் இந் தக் கட்டுப் பாடுகள்தான் இடம் அளிக்கின்றன. கட்டுப்பாடுக ளால்தான் அனாவசியமான பட் டினி, வீட்டு நெருக்கடி, துணிப் பஞ்சம் எல்லாம் ஏற்பட்டிருக் கின்றன. மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட மந்திரிகள் தங்களைவிட புத்திசாலிகள் வேறு யாருமே கிடையாது என்று நினைத்துவிட வேண்டாம். மந்திரி பீடத்தில் உட்காரா விட்டாலும் அவர் களைவிட மேதாவிகள் வேறு எத் தனையோ பேர் இருக்கின்றனர். அவர்களெல்லாரும் கட்டுப்பாடு கள் எவ்வளவு விரைவில் நெருங்கு கின்றனவோ அவ்வளவுக்கு நன்மை என்றே கூறுகின்றனர்.

—காந்தியார்

நாங்கள் உணவு உடை கட் டுப்பாடுகளை இப்போது எடுக்கப் போவதில்லை. இப்போதுள்ள நிலையில் அவற்றை எடுக்கவும் முடியாது. காந்தியார் எதுவும் சொல்வார். ஆனால் நிர்வாகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள நாங்கள் அப்படிச் செய்துவிட முடியுமா?

—டாக்டர் ராஜன்

## 4

மக்கள் நான் சொல்கிறபடி நடந்துகொண்டால், இந்துக்க ளுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே வளர்ந்துவரும் பயங் கரப் பிளவு இருக்கவே இருக் காது.

—காந்தியார்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க சாத்வீக மறுப்பு என் னும் பாதையைக் காட்டினார் காந்திஜி. அறிந்தோ அறியாம லோ அதைப் பின்பற்ற முடிந் தது. ஆனால் இன்று சாத்வீக மான முறையில் இந்துமுஸ்லிம் பிரச்சினையைத் தான் தீர்த்து வருவதாக மகாத்மா கூறுகிறார். அதெப்படி நடந்துவருகிறது என்பது எனக்கென்னவோ புரிய வில்லை. ஆகவே இன்று அவரு டன் நான் சேர முடியவில்லை.

—கிருபாளினி

## 5

**தேவநாகரி, உருது இரண்டு வடிவிலும் எழுதப்படும் ஹிந்துஸ்தானி மொழியே இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டும்.**

**—காந்தியார்**

தேவநாகரி வடிவில் எழுதப்படும் ஹிந்தி மொழியே அரசாங்க மொழியாக இனி வழங்கும்.

**—ஐக்கிய மாகாண காங்கிரஸ் சர்க்கார் உத்தரவு.**

காந்தியார் அவதார புருஷர் என்று அர்ச்சிக்கப்படுகிறார்; எம்மை வாழ்விக்க வந்த எந்தையே என்று பாசுரம் பாடி வாழ்த்தப்படுகிறார்; உலகம் உய்ய வந்த யெம்மான் என்று கவிஞர்களால் சித்தரிக்கப்படுகிறார்; ஆயிரமாயிரம் மக்களால் ஆண்டவன் எனவே கருதப்பட்டு பக்தி பூர்வமான வணக்கமும் அன்பும் நாள்தோறும் காணிக்கையாகத் தரப்படுகிறார். மகாத்மா என்ற உடனே மக்கள் எண்ணம் அரவிந்தர் மீதோ ரமணரிஷி மீதோ சித்தர்கள் மீதோ கௌதம புத்தர் மீதோ இராமலிங்கர் மீதோ இராம தீர்த்தர் மீதோ செல்வதில்லை; காந்தியார் மீதே செல்கிறது. "காந்தியார் என்றால் மகாத்மா; மகாத்மா என்றால் காந்தியார்" என்று மக்கள் எண்ணுகின்றனர். வடநாட்டு ஸ்ரீ நகரில் காந்தியாருக்கு ஆலயமும் எழும்பிற்று; தென்னாட்டு அசலாம்பிகை அம்மையார் அவரைப் பாராட்டி **காந்தி புராணமும்** எழுதினார். அவருடைய சிஷ்யர்கள் **காந்தி பஜனை** செய்யாத நாட்களில்லை **காந்திஜி பக்த சபா** இல்லாத ஊர்களுமில்லை. காந்தி ஜெயந்தி கொண்டாடுவதைப் போல-உண்மையைச் சொல்கிறோம்-வேறு எவருடைய நாட்களும் அத்தனை சிறப்புடன் கொண்டாடப்படவுமில்லை. உள்ளபடியே காந்தியாருக்குக் காட்டப்படும் அளவு மரியாதை, பக்தி, அன்பு, ஆதரவு, வேறு எவருக்கும் காட்டப்பட்டதில்லை. அவருக்குத் தரப்படும் போற்றுதல் ஈடு இணையற்றது - இந்தியத்துணைக் கண்டத்து வரலாற்றில் மட்டு மல்ல, வேறு எந்த நாட்டு வரலாற்றிலும் காணற்கரியதோர் அற்புதம் அது. **ஆம், ஆனால் அவர் ஓர் செல்லாத காசு.**

பக்தி காட்டுகின்றனர் அவரிடம்; ஆனால் அவர் சொல்லுக்கு மதிப்புக் காட்டுவதில்லை. போற்றிப் போற்றித் துதிபாடத் தவறுவதில்லை; ஆனால் அந்த 'அற்புத புருஷர்' காட்டும் வழியிலோ செல்வதில்லை. நாட்டுக்கொரு தலைவன் காந்தியடா என்று பண்பாடத் தயார் கூறுகின்றனர். ஆனால் அந்த ஒரு தலைவன் தீட்டும் திட்டங்களையோ ஏற்று நடப்பதில்லை—இது இன்றைய காங்கிரசாரின் நிலைமை. இதை மறைத்துப் பயனில்லை. மறைப்பதும் இனி முடியாது. பழுத்து வரும் கட்டியை மறைத்து வைத்து என்ன பயன்? அறுத்தெடுத்து மருந்து வைத்துக் கட்டிவைத்துக் குணப்படுத்தல்தானே முறை? அது தானே நியாயமாகச் செய்யவேண்டிய செயல்?

காந்தியார் கதர் ஒன்றே கதி மோட்சம் - நெசவாலைகள் ஆலகால நஞ்சு என்கிறார். மில்கள் எல்லாவற்றையும் எடுத்துவிட்டு எல்லோருக்கும் கதர் சப்ளை செய்யப் போகிறோம் என்பது வெறும் பைத்யக்காரத்தனம் என்கிறது "தினசரி." தினசரி வகுப்புத்துவேஷப் பத்திரிகை அல்ல; சூனாமானா ஏடுமல்ல; காமராஜர் வலதுகரம் ஸ்ரீமான் சொக்கலிங்கத்தின் ஏடு! அவர் காந்தியை வெறுப்பவரா! கிடையாது. காந்தி அம்மானை பாடத் தவறாதவர் ஆனாலும் அ
சொல்கிறார் கதர் கவை
வாது என்று! கதர் க
கொண்டேதான் சொல்
கதர் அனைவருடைய தேவை
யும் நிறைவேற்றாது என்
ஏன் இந்த முரண்பாடு த
ருக்கும் தொண்டருக்
மிடையே.

அஹிம்சா பரமோ தர்ம
கிறார் காந்தியார். வா
வாள்! வேட்டுக்கு வேட்
என்கிறார் சர்தார் ப
அவரோ காந்தியாரின் அத்ய
சிஷ்யர்—அணுக்கத் தொண்
எந்த நிலையிலும் அஹிம்
சையைக் கடைப்பிடிக்கலாம்
அஹிம்சைக்குத் தோல்வி
பதே கிடையாது—இது கா
யார் வாக்கு. நாம் அஹிம்
அஹிம்சை என்று சொ
வந்ததெல்லாம் கையாலா
தனம்; கோழைத்தனம், இ
அது சாத்தியமில்லை — இ
"பாரத தேவி"யின் வாக்
பாரத தேவியோ சூனாமா
களை ஒழித்துக்கட்ட வே
மென்று உரத்த குரலில் கூவி
தேசியத்தாள்!

உணவு உடை கட்டுப்பாடு
தொலையவேண்டும் என்று கா
யார் நவின்றால் அஃது எங்ஙன
இயலும் என்று கடாவுகி
டாக்டர் ராஜன்—அவர் கா
கிரஸ் அமைச்சர், அமைச்
மட்டுமல்ல, காந்தியாரின் ே
மும் பாசமும் முழு அளவுக்
பெற்ற ஆச்சாரியாரின் பி
சிஷ்யர்!

என்னைப் பின் பற்றுங்க
இந்து முஸ்லிம் பிளவை ஒழி
துக் கட்டுகிறேன் என்று கா
யார் சொல்லி முடிப்பதற்கு
"எப்படி முடியும் அது? எ
வண்ணம் நிகழும் அற்பு
அடியேன் அறிகிலனே" என்
தெரிவித்து விடுகிறார் காங்கி
ராஷ்டிரபதி, பொது மேடையி

(15-ம் பக்கம் பார்க்க.)

ல் அரங்கம் :

# ாரீர் பொதுவுடைமைத் திராவிடம் அமைக்க!

## கம்யூனிஸ்டு நண்பருக்கு அன்பழைப்பு

[திராவிடப் பிரிவினை வேண்டாம் என்றுரைத்த கம்யூனிஸ்டு நண்பருக்குத் திராவிடக் கழகத்தவர் தரும் மறுப்புரையின் கடைசிப் பகுதி இது.]

ாவிட நாட்டுப் பிரிவினையை
ங்க வந்த கம்யூனிஸ்ட் நண்
வேறு என்னதான் வழி
கிறார் திராவிட இனத்தின்
ச்சிக்கு?

ன்று கருத்துகளைத் தருகி
ம்யூனிஸ்ட் நண்பர்.

ஒன்று: "சிதைந்து கிடக்
ம இனங்கள் முழு உரு
த்தக்கூடும். ஹைதரா
த் ஆந்திரர்கள் ராயல
மை ஆந்திரர்களுடன்
ர்ந்தால் விசால ஆந்திர
ம், கொச்சி திருவாங்கூர்
பார்பகுதிகளைச் சேர்ந்த
லையாள மக்கள்
ஒன்றுபட்டால் ஐக்கிய
ாளமும், இரு மாகா
ங்களிலும் இரு சமஸ்
னங்களிலும் துண்டுபட்
கிடக்கும் கன்னடர்கள்
று சேர்ந்தால் சம்யுக்த
னடமும், நாஞ்சில் நாடு
ைக்கால் புதுவைத் தமி
கள் சென்னைத் தமிழ
ன் ஒன்று சேர்ந்தால்
ய தமிழகமும் உருவா
கூடும்."

ருவாகக் கூடும் என்ப
ன? உருவாகத்தான் வேண்
உருவாகவே போகின்றன.

உருவாக வேண்டும் என்பதே திராவிடக் கழகத்தின் ஆசை.

தமிழகம் ஆந்திரம் மலையாளம் கன்னடம் என்னும் நான்கு நாடுகளும் அலகாபாத்துக்கும் ஆமதாபாத்துக்கும் பம்பாய்க்கும் பிற "மேல் இடங்களுக்கும்" தலை குனிந்து நிற்கும் அடிமை வாழ்வினின்றும் நீங்கி தம்மைத் தாம ஆளும் சுதந்தர வாழ்வு பெற வேண்டும் என்னும் இலட்சியத்தையே தன் இருதய கீதமாகக் கொண்ட திராவிடக் கழகம், இந்த நாடுகள் ஒவ்வொன்றும் தத்தம் முழு உரு எய்துவதை (சமஸ்தானங்களில் உள்ள தத்தம் பகுதிகளைப் பிரித்தெடுத்து தம்முடன் இணைத்துக் கொள்வதை) மகிழ்ச்சியுடன் வரவேற்கும். அதற்குத் தன்னாலான பணி புரியவும் தயங்காது.

**இரண்டு:** "தென்னிந்திய இனங்கள் ஒவ்வொன்றும் தம் தம் வாழ்க்கை எப்படியிருக்கப் போகிறது என்பதைத் தாமே நிலை நாட்டிக் கொள்ள வேண்டும். அந்தந்த இனத்தவர் தங்கள் தலைவிதியை முடிவு செய்து கொள்ளும் உரிமை அவரவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இவ்வுரிமையின் அடிப்படையில் அவர்கள் மற்ற இனத்தவருடன் **சேர்ந்துழைக்கக்கூடும்**."

சேர்ந்துழைக்கக் கூடும் என்று சொல்லி நிறுத்துவானேன்? சேர்ந்துழைக்க வேண்டும் என்று சொல்வோமே என்றுதான் கூறுகிறது திராவிடர் கழகம். சேர்ந்துழைத்தால்தான் அனைவர்க்கும் வாழ்வுண்டு என்று தெரிகிறபோது, சேர்ந்து நின்றால்தான் வட நாட்டு ஏகாதிபத்தியத்தின் பேராசையினின்று தென்னாட்டவர் **நால்வரும்** தப்ப முடியும் என்பது விளங்கும்போது, சேர்ந்துழைக்கக் கூடும் என்ற மனத் திருப்தியோடு நிற்பது அழகா? சேர்ந்துழைப்பதற்கான பணி புரிவதல்லவா நேர்மை? சேர்ந்துழைக்கக் கூடும் என்பது தெரிந்தும் கம்யூனிஸ்டு நண்பர்கள் இந்தப் பணி புரிய அஞ்சுவானேன்?

**மூன்று:** தென்னிந்திய தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை பயனுள்ளதாக ஆகவேண்டுமானால் நிலச்சீமான்களுக்கும் பண மூட்டைகளுக்கும் சமூக வாழ்க்கையிலும் பொருளாதாரத்திலும் உள்ள பிடிப்பு

தகர்த் தெறியப்படவேண்டும் விவசாயத்திலே புரட்சி வேண்டும். பெருந்தொழில்கள் தேசிய மயமாக்கப் படவேண்டும்."

ஆம், கட்டாயம் ஆக்கப்பட வேண்டும். திராவிடர் கழகம் நாடெங்கும் செய்துவரும் பிரசாரமே இதுதான். எனவே திராவிடர் கழகத்திற்கு இந்த அடிப்படைத் திட்டத்தில் எத்தகைய மாறுபாட்டு உணர்ச்சியும் கிடையாது.

திராவிடர் கழகம் கூறுவதெல்லாம் இந்த நிலச் சீமான்களும் பண மூட்டைகளும் ஒழிந்தால் மட்டும் போதாது, பிறவி முதலாளிகளும் கூடவே ஒழிய வேண்டும் என்பதுதான். ஏனெனில் பண முதலாளித்வம் என்னும் கட்டிடம் பிறவி முதலாளித்வம் என்னும் கடைக்காலின்மீதே எழுப்பப்பட்டிருக்கிறது. எனவே ஒன்றை வைத்துக்கொண்டு மற்றொன்றை ஒழிப்பதென்பது இயலாது.

இந்த மூன்றும் தான் கம்யூனிஸ்ட் நண்பரின் உள்ளம் உரைக்கும் உயரிய வழிகள் எனில் மூன்றில் ஒன்றுக்குக்கூட எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. ஓரே ஒரு திருத்தம் மட்டும் உண்டு. அதுவும் இரண்டாவது கருத்துக்குமட்டும் தான். **தென்னிந்திய இனங்கள் நான்கும் எதிர் காலத்தில் சேர்ந்துழைக்கக் கூடும் என்பதை, சேர்ந்துழைக்க வேண்டும் - சேர்ந்துழைப்பதே நல்லது** என்று மாற்றிவிட வேண்டும் என்பதே என் திருத்தம்.

நண்பரே! கம்யூனிஸ்ட் தோழரே! இம் மூன்றும் தான் உம்முடைய கருத்துரைகள் எனில் இவற்றில் கருத்து வேற்றுமை இல்லை எனக்கு. இம் மூன்றும் மிகமிகச் சரி ஆயிற்றே! நாங்கள் கூறுவதும் இதுதானே! இதை முதலிலேயே கூறி இருந்தால் இவ்வளவு நேரம் ஏதேதோ பிரச்சினைகளைப் பற்றி விவாதித்தே இருக்கத் தேவை இல்லையே! ஜர்மன் இனத்தைப் பற்றியும், ஸ்விஸ் நாட்டைப் பற்றியும், ஜப்பான் மக்கள் பற்றியும், ஆரிய மொழிபற்றியுமெல்லாம் நாம் பேசியே இருக்க வேண்டாமே!

போனது போகட்டும். வாரீர் கை குலுக்குவோம். வடநாட்டுச் சுரண்டலை ஒழித்துக்கட்ட ஒன்றுபட்ட முன்னணி அமைப்போம்; தென்னிந்தியக் கூட்டரசு நிறுவுவோம்; திராவிட இனத்தவர் நால்வரும் வாழ வழி வகுப்போம்; ஹிந்துஸ்தான் சிறையிலிருந்து தென்னாட்டை மீட்போம்; பாட்டாளிகள், நல் வாழ்க்கையின் கூட்டாளிகளாய் இருப்பதற்கேற்ற திட்டங்கள் தீட்டுவோம்; அவற்றை நடைமுறையில் நிலை நாட்டுவோம். வாரீர் தனித் தரணி காண— திராவிடருக்கு வாழ்வளிக்க — சுரண்டலை ஒழிக்க — சம[...] ஆட்சி அமைக்க—ஐக்கிய [...] விட சோஷலிசக் கூட்[...] நிறுவ என்று கனிவு[...] அழைக்கிறேன், உம்மை[...] உம் தோழரையும். நன்றி, [...] கருத்துரைக்கு.

## வணக்கம்

நம் அரசியல் அரங்கில், திரா[...] பிரிவினை வேண்டுமா என்ற த[...] பில் நிகழ்ந்த இந்த எழுத்[...] போரில், கம்யூனிஸ்டுகள் பக்[...] நின்று அவர்கள் பிரச்சினை[...] நன்கு விளக்கிய **தோழர் A. சங்கரன் எம். ஏ.** அவர்களுக்கு[...] அவருக்குத் தக்க மறுப்புரை வ[...] கிய திராவிடர் கழகத் தோழருக்[...] நம் நன்றியறிதலான வணக்[...] கள். இதே போன்று காங்கிர[...] கட்சி, தமிழரசுக் கழகம், சோ[...] யலிஸ்டு கட்சி, முஸ்லிம்லீக் இ[...] றைச் சார்ந்தவர்கள் திரா[...] நாட்டுப் பிரிவினை பற்றிய த[...] கட்சிக் கருத்தை சுருக்கமா[...] முறையில் எழுதி அனுப்பினால் [...] அரசியல் அரங்கில் அவை இ[...] பெறும்.

ஆசிரியர்கள்
**"போர்வாள்"**


நியூ ஈரா ★ ஆங்கில வார வெளியீடு
[NEW ERA]

சென்னையிலிருந்து
**டிசம்பரில் வெளிவரும்**

★

ஆசிரியர்:
**C. N. அண்ணாதுரை M. A.**

க்கு உபதேசி—2 :

# ல்லிபுரத்து மடாதிபதி

(இராதா மணாளன்)

காட்சி 1.

டர் : மடாலயம்

ருப்போர் : மடாதிபதி, பிரதம சீடன், சீடர்கள், பக்தர்கள்.

ாலம் : மாலை நேரம்.

[கூடிய பக்தர்கள், மடாதிபதியின் வருகையைஎதிர்பார்த்திருக்கின்றனர். பிரதம சீடன் முன் வர, பின்னே தழதழத்த உடலோடு, காதில் குண்டலமாடி, மடாதிபதி வருகிறார், பக்தர்கள் எழுந்து நின்று வணங்குகின்றனர். ஆசனத்தில் மடாதிபதி அமர்கிறார்.]

ம சீடன் : நமப்பார்வதி பதயே!

தர்கள் : ஹரகர மகதேவ் !

[மடாதிபதி கையசைக்க அனைவரும் உட்காருகிறார்கள்.]

ாதிபதி : சிஷ்யா !

சீ : சுவாமி !...சித்தமாய் உள்ளோம் !... நமப்பார்வதி பதயே !

தர் : ஹரகர மகதேவ் !

ாதி : பக்த சிரோமணிகளே ! இன்று புண்ய தினம். மகா சிவராத்திரி ! இன்று இரவெல்லாம் தூங்காமல் கண் விழித்திருந்து, பரமனது திருக்கல்யாண குணங்களைக் குறித்து நினைத்துக் கொண்டோ, பேசிக்கொண்டோ இருத்தல் வேண்டும்,

என் அப்பன் பெருமையை இன்றெல்லாம் பேசலாம், மாதக் கணக்கில் பேசலாம், ஆண்டு முழுவதும் பேசலாம், ஆயுள் முழுவதும் பேசலாம் ! பேசிக் கொண்டே யிருக்கலாம், திகட்டாத தேன் அது ! சுவைக்கச் சுவைக்க இனிக்கும் கரும்பு அது ! பருகப் பருகத் தித்திக்கும் பாலது ! கனியது ! கற்கண்டு அது !

காலம் மாறிக்கொண்டே வருகிறது. மாற்றம் நம் மனத்திற்கு வருத்தத்தைத் தருகிறது. சன்மார்க்கம் தழைப்பதற்குப் பதில், அதர்மம் தலை விரித்தாடுகிறது. பக்தி, ஆச்சாரம், அநுட்டானம், பழமையாம்! அது கூடாதாம் ! கேட்டீர்களா ?......பழமை என்பதற்காகவே நல்ல தொன்றை ஒதுக்குவது—திட்டுவது சரியா? மழை பழமையானது. அதனை வேண்டா மென எந்த விவேகியாவது சொல்வானா? மலை பழமை, நாட்டினின்றும் அதனை அப்புறப்படுத்துவது அறிவுடைமையா ? மல்லிபுரத்து மக்களிடையே அந்த விஷக்காற்று இன்னும் வீச வில்லை. வீசாமல் பார்த்துக் கொள்ளுங்கள் பக்தர்களே !

அக் காலத்தில் யாகங்களை அரக்கர்கள் அழித்தார்கள். முடிவில் பிடிசாம்பலானார்கள். இப்பொழுது சீர்திருத்தமென்று சிலர் கூறிக்கொண்டு நம்மைத் திட்டுகிறார்கள். அவர்களுக்காக நாம் இரங்குகிறோம், வருத்தப்படவில்லை. அவர்களது முடிவும் அரக்கர்களது முடிவேதான். உங்களுக்கு ஒரு ஐயம் தோன்றலாம், அய்யன் ஏன் இப்பாவிகளை அழிக்காமலிருக்கிறா ரென்று. தோடுடைய செவியன் இப்பொழுது தொடமாட்டார் இவர்களை ! பிறை சூடிய பெருமான் பொறுத்திருக்கிறார். எம்பிரான் முன்பு இவர்கள் எம்மாத்திரம் ? அம்பலத்து ஆடுவான் அவசியம் இந் நாத்தீகர்களை அழிப்பார் ! சுடலைப் பொடி பூசிய சிவபிரான் சுட்டுப் பொசுக்கப் போகிறார் முடிவில் ! நீங்கள் கவலையை விடுங்கள்.

[மடாதிபதியின் கண்கள் மங்கையரின்பக்கம்சென்று, சிறிதுநேரம் அங்கு ஆராய்ந்து விட்டு, திரும்புகிறது.]

பக்த கோடிகளே ! மாயை ! பெண் மாயை ! நாம் பெற்ற மக்கள் மாயை ! பொன் பொருள் சகலமும் மாயை. மாய உலகில் மகேஸ்வரன் நம்மைப் பிறப்பித்து விட்டார். ஊத்தைச் சடலத்தைப் படைத்தார். மதியை மயக்க மங்கையைப்படைத்தார். பொன்னையும் மண்ணையும் படைத்தார்.

சைவ மெய்யன்பர்களே ! உள்ளத்தை அடக்குங்கள், எந்நேரமும் எம்பிரானையே நினையுங்கள், மங்கையரின் மாயவலையில் விழாதீர்கள், பொன்னையும் மண்ணையும் துச்சமென்று தள்ளுங்கள் ! உங்கள் உள்ளங்களில் ஆசை யென்ற கடும் விஷம் தேங்கிக்கிடக்கிறது. விஷத்தைக் கக்கி விடுங்கள். பிறகு சங்கரன் சகல சஞ்சலங்களையும் போக்கி, முடிவில் உங்களைத் தன் திருவடிகளில் சேர்த்துக் கொள்வான் !

இரவு முழுவதும் உங்களுக்குச் சிவ பெருமானின் திருக்கல்யாண குணங்களைக் கூற வேண்டுமென்பது என் ஆசை. ஆனால் உடல் நலம் சரியில்லை. ஆகவே இந்தப் புண்ய இரவை வேத நூற்களைப் படித்துக் கொண்டே கழிக்கத் தீர்மானித்திருக்கிறேன் !

பி. சீ : நமப்பார்வதி பதே !

பக்தர் : ஹரகரமகாதேவ் !

[பூஜை நடக்கிறது. பக்தர்கள் மடாதிபதிக்குக் காணிக்கை தந்துவிட்டு திருநீறுபெற்றுக் கொண்டு செல்கிறார்கள்.[

மடாதி : சிஷ்யா ?

பி. சீ : எல்லோரும் சென்று விட்டார்கள் சுவாமி !

மடாதி : இப்படி அருகில் வா !... இரவு...

(10-ம் பக்கம் பார்க்க)

8 —11—47 சனிக்கிழமை

# ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்!

தமிழர்களால் துரத்தித் துரத்தி அடிக்கப்பட்ட கட்டாய இந்தி மறுபடியும் தமிழகத்தின் தலைவாயிலை எட்டிப் பார்க்கிறது.

ஆயிரத்து முந்நூறு அருந் தமிழர்களை வெஞ்சிறைக்குள் தள்ளி, அவர்தம் வாழ்வில் நஞ்சிட்ட இந்தி மீண்டும் வருகிறேன் என்று "புன்னகைவராளி" வாசிக்கிறது.

'எப் பக்கம் வந்து புகுந்து விடும்—இந்தி எத்தனை பட்டாளம் கூட்டிவரும்" என்று எந்த இந்தியின் நுழைவை எதிர்த்துத் தமிழ் வீரர் கூட்டம் அலைகடலெனத் திரண்டு அடலேறு என முழங்கிற்றோ, அதே இந்தி இன்பத் தமிழ்நாட்டில் நுழைவதற்கு இன்று மற்றும் ஓர் முறை வழி பார்க்கிறது.

எந்த மொழி ஆட்சிப் பீடத்தில் ஏறுவதால் தமிழர் வாழ்வு கெடும்—தமிழர் நலம் கெடும்—தமிழர் திண்தோள் வன்மை கெடும்—பச்சைப் பசுங் கிள்ளைகளின் பகுத்தறிவுப் பண்பு கெடும்—வெறும் சூழ்ச்சியில் வாழும் ஆரியம் மட்டுமே வாழும் என்று தமிழ் உலகம் முழுவதும் ஓரே குரலில் கூறிற்றோ, அதே மொழி கல்விச் சாலைகளில் கட்டாய உருவத்தில் இந்த ஆண்டு நுழையப் பார்க்கிறது.

ஒரு தாளமுத்தை ஒரு நடராசனைத் தன் கொடும் பசிக்கு இரையாக்கிக் கொண்டு, இன்னும் பல தாளமுத்துக்கள் நடராசர்கள் இலரோ இலரோ என்று இரத்தப் பசியுடன் உலவி வந்த கட்டாய இந்தி இதோ மீண்டும் பயங்கரப் பலி பீடம் அமைக்கத் தொடங்கி விட்டது.

அறுபதாண்டுங் கடந்த கிழவனார் என்றும் பாராது, அருமைத் தமிழ் நாட்டின் தலைவர் பிரான் என்றும் ஓராது, தென்னாட்டில் பகுத்தறிவுத் தீ மூட்டிய புத்தர் அவர் என்பதும் அறியாது, வாழ்விழந்த தமிழர்க்கு வாழும் வழிகாட்டிய அறிவின் திருவுரு என்பதும் நினையாது, ஆயிரமாயிரம் தமிழர் தம் உள்ளத்தை ஆளும் சிந்தனைச்சிற்பி என்பதும் காணாது, பெரியார் இராமசாமியைப் பெல்லாரியிலும் கோவையிலும் சென்னையிலும் உள்ள கொடுஞ் சிறைகளில் இட்டு வாட்டி வதைத்த கட்டாய இந்தி மறுபடியும் தன் நைந்துபோன பழம் புராணம் வாசிக்க வருகிறது.

"விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி—அது வீரத் தமிழ் மக்கள் ஆவி என்போம்; இந்திக்குச் சலுகை தந்திடுவார்—அந்த ஈனரைக் காறி உமிழ்ந்திடுவோம்." என்று சினந்து கூறிய தமிழகத்தின் இன்றைய நாடி பார்க்கவோ என்னவோ நாம் அறியோம், இந்திக் கொடுமை அண்மையில் வருகிறது என்று தெரிகிறது. அன்பர் ஆச்சாரியார் இந்தியை நுழைத்தார் அன்று. எதிர்ப்பு, எரிமலைத் தீயெனக் குமுறி எழுந்தபோது,

கொஞ்சமும் அஞ்சாது கூ
ஆள்வது நானா அல்லது இ
ஈரோட்டு இராமசாமியா
பதைத்தான் ஒருகை பா
றேன் என்று. ஆனால் பின்
தமிழ் வீரம் வென்றபோ
ஆரிய சூழ்ச்சி அழிந்தபோ
அவரே கூறினார், "புற்றீசல்
வாலிபர்கள் வருகிறார்க
இந்த இந்தியை ஒழிக்க!
செய்வேன்! எதறிவேன்" என்
அதே தோல்விப் படலத்
திரும்ப ஓர் முறை வாசிக்
தான் போலும் இந்தி வருகி
ஆம்! முதல் மூன்று பா
களில் பயிலும் மாணவர்
சில் திணிக்கப்படுமாம் கட்
இந்தி, வரும் புது ஆண்
இதற்கான அறிகுறிகள்
கெனவே தென்னாட்டு அரசி
அடிவானத்தில் தென்படுகி
றன.

இந்திக் கட்டாயம் வரு
உண்மையாயின் நாம் அ
லாரை எச்சரிக்கிறோம்—
மாக எச்சரிக்கிறோம்—பழை
வரலாற்றை நினைப்பூட்டி
சரிக்கிறோம்—ஆச்சாரியார்
சியல் அநுபவத்தை முன்
த்தி எச்சரிக்கிறோம்—அ
நாள் தமிழகம் சீறிப் போ
டதே வேல் பாய்ந்த வே
என, அந்தப் "புறநானூற்
எடுத்துக்காட்டி எச்சரிக்கிறோ
தமிழகம் இதனைத் தாங்காத
நிச்சயம் தாங்காது.

தமிழன் பொல்லாங்கு செ
யான்—போரிடமாட்டான்—
கிளர்ச்சிகள் காணான்—அ
புடையான் - அவன் ஓர் சா
என்று அரசாங்கம் எண்
மாயின், எண்ணி இந்த இந்
கட்டாயத்தை (இன்றுள்
அளவு போதாதென்று மு
அளவுக்குத்) திணிக்குமாயின்
அது கட்டாயம் ஏமாந்
போகும் என்பதை முன் கூ
டியே தெரிவிக்க விழைகிறோ

ிழன் வீண் சண்டைக்குப்
மாட்டான்! உண்மை
! ஆனால் வந்த சண்டையை
விடமாட்டான.
ிழன் பொறுமைக்கு அணி
! ஆம், மெய்தான். ஆனால்
றுமையின் எல்லை கடந்து
ால், அவன் சுழலும் சூறா
யாவான், ஊரை உலுக்கும்
மாவான், பகைக் குலத்
மாய்க்கும் மாவீரன்
ன். உண்மை வீரம்,
றுமையின் எல்லைக் கோட்
ானே துவங்குகிறது! தமிழ்
ம் அத் தன்மையதுதான்.
ல் சூது சூழ்ச்சி கிடையாது.
றந்து தாக்கும் ஆரியப்
பு கிடையாது. மாற்றார்
ட்டத்திலிருந்து விபீஷணர்
த் தேடித்தேடிப் பெறும்
ஞ்சக நரித் தன்மை துளி
வும் கிடையாது. மரத்தோ
நின்று வாலியை வீழ்த்திய
ாமன் வீரம் அல்ல அது!
நின்று போராடி, கனக
பரை மாய்த்த செங்குட்டு
வீரம். ஆம்! களத்திலே
கவன் ஓய்ந்து நின்றபோது,
ன்று போய், நாளை வா!'
று சொல்லி அனுப்பும்
ம் மிக்கது அவன் வீரம்.
தகையான் உள்ளத்தை,
சியலாரே, புண்படுத்தாதீர்.
தூங்கும் எரிமலை, வெறும்
மலை அல்ல.
மிழன் எளிதில் போர்க்
லம் பூண ஒப்புவதில்லை.
ல் களத்தில் குதித்து விட்
லோ, வெற்றி அவனைத் தழு
ம் அந்த விநாடி வரை ஓய்வு
றுவதென்பதே அவன் அக
ியில் இல்லை.
எனவேதான் கூறுகிறோம்,
ாய இந்தியைத் தமிழர்
ளிகளில் திணிக்க வேண்
ம், தமிழர் பொறுமையைச்
திக்க வேண்டாம், நெரந்து
ன தமிழர் உள்ளத்தில்
பாய்ச்ச வேண்டாம்,

தமிழே கட்டாயம் அற்ற நிலை
யில் இந்தியைக் கட்டாய
மாக்க வேண்டாம், தமிழ்த் திரு
நாடதனைப் பெரியதோர் போர்க்
களம் ஆக்க வேண்டாம்,
அமைதியுள்ள தமிழகத்தில்
அமளியொன்றை எழுப்ப
வேண்டாம், வேண்டாம் —
வேண்டாம் என்று அழுத்தந்
திருத்தமாகவே கூறுகிறோம்—
ஆளவந்தார்கள் அறிய! அறிந்து
இந்தியைக் கைவிட! நேர்மைக்
கும் நீதிக்கும் கட்டுப்படும்
பண்பு ஓமந்தூரார்க்கும் அவி
னாசியார்க்கும் உண்டு என்ற
நம்பிக்கையால் இதனைக் கூறுகி
றோம். "இல்லை—எமக்கும்
கேளாக் காதுதான், ஆச்சாரி
யார் போல" என்றுரைப்பரா
யின், பிறகு, தமிழகம் இருக்கி
றது, தமிழர் பண்பு இருக்கிறது,
அநீதிக்கு அடங்க மறுக்கும்
தமிழ்த்தன்மை இருக்கிறது,
தக்க செயல் புரிய!
ஆச்சாரியார் காலத்திலேயே
கட்டாய இந்தி நிலைக்கவில்லை
என்றால் இன்று அது நிலைக்க
முடியாது. ஏன்? அந்தக் காலம்,
தேசிய வட்டாரத்தில் "தமிழ்
நாடு தமிழருக்கே" எனும் முழக்
கம் எழாத காலம்—எழமுடியும்
என்று கனவுகூட காணப்பட
முடியாத காலம்—வளைவு
மீசையை முறுக்கிக்கொண்டு
ம. பொ. சிவஞானங்கள் தமிழ்
முரசு கொட்டாத காலம்—
தென்னாட்டுக் காங்கிரஸ்,
வார்தா கிழித்த கோட்டை இம்
மியும் அழிக்கத் துணியாத
காலம்—டில்லி தாக்கீது என்
றால் எல்லோருமே அஞ்சி நடுங்
கிய காலம்—திருப்பரங் குன்றங்
கள் நடக்காத காலம்—பெரியார்
இராமசாமியும் அவர் பட்டாள
மும் மட்டுமே தமிழ் தமிழ்
என்று சொல்லிக் கொண்டிருந்த
காலம்—புலவர் உலகிலும் மாண
வர் உலகிலும் மறுமலர்ச்சி
சகாப்தம் பிறக்காத காலம்—

பார்க்கும் இடமெங்கும் பழ
மைத் தேவன் செங்கோல் ஓச்
சிய காலம்—அந்தக் காலத்தி
லேயே தென்னாட்டில் இந்திக்
கட்டாயம் தலை நிமிர்ந்து நிற்க
முடியவில்லை எனில், இன்று
இந்தி அரசு கட்டில் ஏறவும்,
தமிழ் தலை கவிழவுமான நிலை
ஏற்படுவதும், அதனைத் தமிழர்
பொறுப்பதும் நடக்கக் கூடிய
செயல்கள்என யார் கூறமுடியும்
—நெஞ்சில் வலுவற்ற சில 'தொ
ட்டால் சுருங்கி'களைத்தவிர ?
ஏனோ, இந்நாள், ஆட்சியினர்
இந்திமீது திடீர் நினைப்புச் செலு
த்தினர்? 1937-40 ம் ஆண்டுக
ளில் நாடெங்கும் வீரமுழக்கம்
புரிந்துவந்த இந்தி எதிர்ப்புப்
பட்டாளங்கள் மறைந்து விட்
டன என்ற எண்ணமா? தமிழர்
நெஞ்சில் வீரத்திற்குரிய இடம்
சுருங்கி விட்டதென்ற நினை
ப்பா? தாளமுத்துகளும் நடரா
சன்களும் இனித் தமிழர் சமு
தாயத்தில் தோன்ற மாட்டார்
கள் என்ற கருத்தா அரசாள
வந்தவர்க்கு? இல்லை, தலைவர்
பெரியார் இனிப் போர்முரசு
கொட்டமாட்டார் என்று தப்
புக் கணக்குப் போடுகிறதா
ஆட்சி? அல்லது இந்திமீது
தமிழருக்கு அன்பு பிறந்துவிட்
டது என்று அதிகார வர்க்கம்
ஆய்ந்து கண்டுவிட்டதா? இவை
அனைத்தும் அல்லவெனில் மேலி
டத்துக்கு மகிழ்ச்சியூட்ட இவ்
வண்ணம் செய்கின்றனரா?
என்னதான் காரணம் இதற்கு?
காரணம் எதுவாயிருந்தாலும்
சரி, நினைப்பும் நோக்கமும்
தவறு அற்றன என்றாலும் சரி,
தமிழகம் கட்டாய இந்தியைத்
துளியளவும் விரும்பவில்லை
இந்திமொழி வருவதால் தமி
ழுக்குள்ள ஆக்கம் குறையும்—
வளம் சுருங்கும்—அழகு சிதை
யும் என்றே தமிழர்கள் எண்ணு
கின்றனர். இன்பத் தமிழிருக்க
இந்தி மொழி ஏன் வேண்டும்

என்றுதான் தமிழர் அனைவரும் கேட்கின்றனர். "மங்கை யொருத்தி தருஞ் சுகமும் எங்கள் மாந்தமிழ்க்கு ஈடில்லை என்றுரைப்போம்—பங்கம் விளைத்திடில் தாய் மொழிக்கே உடல் பச்சை இரத்தம் பரிமாறிடுவோம்" என்று கவிஞர் பாரதிதாசன் கூறுகிறாரே, அது அவருடைய சொந்தக் கருத்தல்ல, தமிழர் உள்ளத்தின் படப்பிடிப்பு. ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள், நீ தேடிவந்த கோழையுள்ள நாடு இதல்லவே என்று தமிழர் அனைவருமே இன்று கட்சி வேற்றுமையின்றி கவி பாடுகின்றனர். இதனை உணராமல் அரசியலார் வலுக் கட்டாயமாக இந்தியை நுழைப்பாராயின் தமிழுலகம் அதை எதிர்த்துப் போரிட்டே தீரும். போர் தொடங்கினால் வெற்றி எவர் பக்கம் இருக்கும் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. மதிப்பிற்குரிய ஆன்பர் ஆச்சாரியார் காலத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் வரலாறு அதைச் சொல்லும். அன்று இறுமாப்புடன் பேசி இறுதியில் தோல்விப் பள்ளத்தில் வீழ்ந்த ஆரியம் அதைச் சொல்லும். அதோ சென்னை மூலகொத்தளத்து இடுகாட்டில் உள்ள இரண்டு கல்லறைகளைக் கேளுங்கள், அவை கணீர் கணீர் என்று பதில் சொல்லும். கல்லறைகள் பேசுமோ என்று கேட்பீர்' வெறும் கல்லறைகள் அல்ல அவை—தாளமுத்து நடராசன் என்னும் இரண்டு வயிர நெஞ்சங்கள் வாழும் இடம் அவை. ஆகவே அவை பேசும்—பேசாமல் பேசும்—பேச வேண்டியவைகளைப் பேசும்—ஆளவந்தார்களும் அறியும்வண்ணம் பேசும்—நிச்சயம் பேசும். கேட்பதற்குத்தான் செவி வேண்டும் ஆட்சியினர்க்கு!

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

**பி. சீ:** சுவாமி, தயார் செய்து விட்டேன்!

**மடாதி:** யாருடா அது?

**பி. சீ:** புதிய புரு! உயர்ந்த ரகம்!

**மடாதி:** புரு புதியதா? பயப்படுமே?

**பி. சீ:** இனிமையாக ஆடும் சுவாமி!

**மடாதி:** இதற்கு முன்பு வேறு கோபுரங்களில் உட்கார்ந்த புருவோ?

**பி. சீ:** கூட்டை விட்டுப் பறக்கக் கற்றுக் கொண்டதே இப்பொழுதுதான் சுவாமி!

**மடாதி:** அப்படியா?

**பி. சீ:** ஆமாம் சுவாமி!

### காட்சி 2.

**இடம்:** மடாலயத்தின் தோட்டம்

**இருப்போர்:** வேலன், தர்மன் (சீடர்கள்)

**காலம்:** அந்தி நேரம்.

**வே:** வாப்பா தர்மா.

**தர்:** வேலா, ஏதாவது செய்தியுண்டோ?

**வே:** மடாலயத்தில் செய்திக்கா பஞ்சம். இங்கு நடப்பவைகளை வெளியிட ஒரு பத்திரிகையே போதாதே!...ஆபத்து...

**தர்:** என்னடா ஆபத்து?

**வே:** பெருத்த ஆபத்து!

**தர்:** ஏதாவது தவறு செய்து விட்டாயா?

**வே:** என்னடா தவறு? தவறு என்ற பதத்திற்கு இங்கு அர்த்தமே கிடையாதே! தவறு, பாபம், அக்கிரமம் இவைகள் மடாலயத்து அகராதியில் அகப்படா வார்த்தைகள், தெரியுதா முட்டாளே! இத்தனை நாள் பழகியும் இது தெரியவில்லையே மண்டு!

**தர்:** வேறென்ன ஆபத்து.

**வே:** இனாம்தாரிகளை ஒழிக்கப் போகிறார்களாம்!

**தர்:** தூ! இதுவா ஆபத்து... அற்ப விஷயம்!

**வே:** எது அற்ப விஷயம்? ஆ நிலங்கள் போய் விட்டால், மடாலயம் என்னவது? குரு இரவு பள்ளிக்கூடம்...

**தர்:** டே! வாயை மூடு! மெது பேசுடா!

**வே:** ஏண்டா?

**தர்:** பள்ளிக்கூடத்திற்கு ய வர்கள் வருகிற நேரமிது ( வரும் சிரிக்கிறார்கள்.)

**வே:** அப்படியென்றால் ஆ தில்லையா?

**தர்:** குருவைப் பார்த்தாயா?

**வே:** பார்த்தேன்!

**தர்:** என்னடா பார்த்தே!

**வே:** அவரைத்தாண்டா!

**தர்:** அவரையாவது மோச யாவது, அவர் முகத்தைப் பா தாயாடா மண்டு? (வே ஆமாமென்று தலையாட்டுகிற அது எப்படி யிருந்தது?

**வே:** வழக்கப்படி மலர்ந்து ருந்தது!

**தர்:** தெரிந்து கொண்டாயா?

**வே:** அதிலிருந்து என்ன தெரி கொள்வது?

**தர்:** முகம் மலர்ந்திருக்கிற ஆகவே குருநாதர் கஷ்டப் வில்லை...

**வே:** ஆமாம்! தெரிகிறது,

**தர்:** இனாம் நிலங்கள் போவ அவருக்கு வருத்தமில்லை, ஆ யால்தான் சந்தோஷமாயி கிறார்.

**வே:** மண்ணாசையே யில்லா ரென்று உலகத்தார் க வேண்டுமென்று வேஷம் போ கிறாரா?

**தர்:** சேச்சே! உண்மையிலே அவர் சந்தோஷமா யிருக்கி வேலா!

**வே:** அப்படியா? ஆச்சரிய யிருக்கிறதே!

**தர்:** இதிலென்னடா ஆச்ச மிருக்கிறது. நிலங்களை எ துக்கொண்டு, நம்ப சர்க் பணம் தந்துவிடப் போகிறார்

சரிதான் ! அப்பொழுது மடா
யம் !

இப்பொழுதிருக்கிறதே, அப்
டியேதானிருக்கும் ! மடத்திற்கு
லமிருக்காது, ஆனல் பண
ருக்கும் !

ஓகோ !......தர்மா ! அதோ
ருடா ?

மதுக்குடம் !

டே ! பெண்ணுடா !......

ஆமாண்டா ! மதுவும் மங்கை
ம் ஒன்றுதானே ! குருநாதர்
ானே சொன்னர் !

[இருவரும் சிரிக்கிருர்கள்.]

காட்சி 3.

டம் : மடாதிபதியின் கட்டி
ற.

ருப்போர் : மடாதிபதி, பிரதம
ன், ஒரு பெண்.

லம் : இரவு பத்து மணி.

[அழகிய பட்டாடை அணிந்த மடாதிபதி அறையில் உலாவிக்கொண்டிருக்கிருர். பிரதம சீடன் வந்து பயபக்தியோடு வணக்கம் செய்கிருன். மடாதிபதியின் முகம் நன்ருக மலர்கிறது.!]

: சுவாமி! புரு வந்திருக்கிறது!

ாதி : சிஷ்யா ! சித்தம் குளிர்ந்தது ! சிங்காரியை உள்ளே வரச் சொல் !

[பெண் உள்ளே வருகிருள், சீடன் வெளியே போகிருன் அறைக்கதவு தாளிடப்படுகிறது.]

ாதி : வா ! வா ! ஏன் பயப்படுகிருய் ! உன் பெயரென்ன ?

ண் : ஜெயம் !

ாதி : ஆஹா ! அருமையான பெயர்! ஜெயம்! எமக்கு எல்லாம் ஜெயம் ! மல்லிபுரத்து மடாதிபதிக்குச் சகலமும் ஜெயம் (அவர் முகத்தில் புன்னகை தவழ்கிறது.) உன் இரு கூரிய கண்கள், என்னை வாட்டுகின்றன. உன் அழகு என்னை நிலைகலங்கச் செய்கிறது, கண்ணே அருகில் வா !

(மெள்ள மெள்ள அவள் அருகில் செல்கிருர்.)

**பெண் :** பகல்,உபதேசத்தில்,பெண் மாயை என்றீரே ! இப்போது...

**மடாதி :** மாயை மனிதர்களுக்கு ! எமக்கல்ல......பரம சிவனுக்குப் பார்வதி யில்லையா......எனக்கு மட்டும்...

**பெண் ;** இருக்க வேண்டியதுதான்! சுவாமி இன்று மகா சிவராத்திரி ஆயிற்றே !

**மடாதி :** ஆமாம் !

**பெண் :** தாங்களிப்படி ?

**மடாதி :** என்ன செய்கிறேன் ! உன் கண்களில் கைலாயத்தைக் காண்கிறேன். சந்தன கன்னங்களில் சங்கரன் புன்னகை செய்கிருன், அதனைக் கண்டு அக மகிழ்கிறேன் ! நீ சக்தி, ஜெயம் !

**பெண் :** தாங்கள் சிவம் !

**மடாதி :** சிவ சக்தி ! (இருவரும் சிரிக்கிருர்கள்) நன்ருகப் படித்தவள்போல் தெரிகிறதே !

**பெண் :** ஆம் சுவாமி ! ஆங்கிலமும் படித்திருக்கிறேன் !

**மடாதி :** அப்படியா ? (ஆரத்தழுவ அருகே செல்கிருர் தாடி ஆடுவதைக் கண்டு தையல் சிரிக்கிருள்) என்ன சிரிக்கிருய் ?

**பெண் :** தாடியைப் பார்த்து...

**மடாதி :** (சிரித்துவிட்டு) எந்த முட்டாளோ, மடாதிபதிகளுக்குத் தாடியை 'கம்பல்சரி' ஆக்கி விட்டான்...தாடி! மன்னனுக்கு முடி யிருப்பதுபோல எமக்குத் தாடியிருக்கிறது.

**பெண் :** முடியும் தாடியும் ஒன்ருகுமா, சுவாமி ?

**மடாதி :** பேதை, நீ அறியாய் ! தாடிகளுக்கு முன் முடிகள் எம் மாத்திரம் ! தாடிகளின் கால்களில் முடிகள் வணங்கித்தான் ஆகவேண்டும் !

**பெண் :** அப்படியா சுவாமி !

[வளையல் ஓசை அதிகரிக்கிறது...முத்தம் தர மடாதிபதி செல்கிருர். பெண் பின் வாங்குகிருள்.]

**மடாதி :** ஏன் பயப்படுகிருய் ? என்ன, என் குண்டலங்களையே முறைத்துப் பார்க்கிருயே ! உனக்குத் தொங்கட்டானிருப்பது போலவே எனக்கும் குண்டலமிருக்கிறது !

**பெண் :** நன்ருக ஆடுகிறது சுவாமி! (சிரிக்கிருள்)

**மடாதி ;** குண்டலம் மட்டுமா ஆடுகிறது ?

**பெண் ;** ஓகோ !

**மடாதி :** உன் உடல் முழுவதும் ஓடும் இன்ப ஊற்றைக் குடிக்க என் உள்ளமும் ஆடுகிறது, ஜெயம் !

**பெண் :** அப்படியா ! பெண் என்ருலே தங்களுக்கு...

**மடாதி :** எனக்கு மட்டுமா ! வாலிபர், வயோதிகர் அனைவருக்கும் தித்திக்கும் ! பெண் ! ஆகா எவ்வளவு இனிமையான சொல்! தேன் குடம், கரும்புத்தோட்டம், மலர் சோலை, ஓடும் ஆறு, பாடும் குயில், ஆடும் மயில் இவை அனைத்தும் ஒன்ருய்ச் சேர்ந்தது பெண் !

[ஆரத் தழுவி, மலர் முகத்தில் முத்தம் தருகிருர்.]

**பெண் :** போதும் போதும் ! அப்பப்பா என்னல் முடியாது !

**மடாதி :** சந்தனத்தை அரைக்க மணம் அதிகரிக்கும், பெண்களைத் தழுவத் தழுவ இன்பம் பொங்கும்... ஏன் சிரிக்கிருய்... போதுமா... நீ ஒன்று தா .. கண்ணே ! ஆகாயத்தில் பறப்பது போலவே யிருக்கிறது எனக்கு !...

[கட்டிலில் இருவர்! விளக்கின் ஒளி மங்குகிறது !]

---


## போர்வாள்

**திராவிடர் வார வெளியீடு**

| | உள் நாடு | | | வெளிநாடு | | |
|---|---|---|---|---|---|---|
| தனி இதழ் ரூ. | 0 | 1 | 6 | 0 | 2 | 0 |
| ஆண்டு 1-க்கு | 5 | 0 | 0 | 6 | 8 | 0 |
| 6 மாதங்கட்கு | 2 | 8 | 0 | 3 | 4 | 0 |

விவரங்களுக்கு:

**போர்வாள்,**
பவழக்காரத் தெரு, சென்னை.

# வருகிறதே தீபாவளி!

[பெரியார் ஈ. வெ. ரா.]

இவ்வருடத்திய தீபாவளிப் பண்டிகை சமீபத்தில் வரப்போகின்றது. திராவிட மக்களே! என்ன செய்யப் போகின்றீர்கள்?

"அப்பண்டிகைக்கும் எங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை" என்று சொல்லிவிடப் போகின்றீர்களா? அல்லது அப்பண்டிகையைக் கொண்டாடப் போகின்றீர்களா? என்பதுதான், "நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்?" என்று கேட்பதன் தத்துவமாகும்.

நண்பர்களே! சிறிதும் யோசனையின்றி, யோக்கியப் பொறுப்பின்றி, உண்மைத் தத்துவமின்றி, சுயமரியாதை உணர்ச்சி இன்றி, சுயமரியாதை இயக்கத்தின்மீது வெறுப்புக் கொள்ளுகின்றீர்களே யல்லாமல்,

மற்றும் சுயநலப் பார்ப்பனர் வார்த்தைகளையும், புராணப் புஸ்தக வியாபாரிகளின் தன்னல விஷமப்பிரசாரத்தையும், கண்டு மயங்கி அறிவிழந்து ஓலமிடுகின்றீர்களே யல்லாமல்,

மேலும் உங்கள் வீடுகளிலும், அண்டை அயல்களிலும், உள்ள கிழங்களுடையவும், அழுக்கு மூட்டைகளுடையவும், ஜீவனற்ற தன்மையான "பழைய வழக்கம்", "பெரியோர் காலம்முதல் நடந்துவரும் பழக்கம்" என்கின்றதான வியாதிக்கு இடம் கொடுத்துக் கொண்டு கட்டிப் போடப்பட்ட கைதிகளைப்போல் துடிக்கின்றீர்களே யல்லாமல்,

உங்கள் சொந்த பகுத்தறிவைச் சிறிதுகூட செலவழிக்க சம்மதிக்க முடியாத அறிவு உலுத்தர்களாய் இருக்கின்றீர்கள்.

பணத்தையும், மானத்தையும் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கத் தயாராயிருக்கிறீர்கள்; சுதந்தரத்தையும், மனிதத் தன்மையையும் எவ்வளவு வேண்டுமானாலும்விட்டுக்கொடுக்கத் தயாராயிருக்கிறீர்கள்; ஆனால் உங்களை இழிவுபடுத்துகிறவர்களைப் பற்றியோ அதற்கு ஆக ஏற்படுத்தப்பட்ட வஞ்சகச் சூழ்ச்சிகளைப் பற்றியோ சிந்தித்துப் பார்க்க உங்களது பகுத்தறிவைச் சிறிதுகூட பயன்படுத்தத் தயங்குகிறீர்கள். அது விஷயத்தில் மட்டும் ஏன் வெகுசிக்கனம் காட்டுகின்றீர்கள்? இந் நிலையிலிருந்தால் என்றுதான் நீங்... மானமுள்ள சமுதாயத்தை... சேர்ந்த மனிதர்களாவது?

திராவிடர்களில் புராணப் பு... தக வியாபாரிகள் சிலர் மாத்தி... வாழ்ந்தால் போதுமா? கோ... கணக்கான மக்கள் ஞானமற்... மானமற்று, மனிதத்தன்... யற்று, கால்வயிற்றுக் கஞ்சிக்கு... வகையற்று விலங்குகளாய் அ... வதைப் பற்றிய கவலை வே... டாமா? என்று கேட்கிறேன்.

புராணக் கதைகளைப் பற்... பேசினால் கோபிக்கின்றீர்கள்... அதன் ஊழலை எடுத்துச் சொ... னால் காதுகளைப் பொத்தி... கொள்ளுகின்றீர்கள்.

எல்லோருக்கும் தெரிந்த... தானே; அதை ஏன் அடிக்க... கிளறுகின்றீர்கள்? இதைவி... உங்களுக்கு வேறு வேலை இ... லையா என்று கேட்கின்... கள். ஆனால் காரியத்தில், ஒ... நாளைக்கு உள்ள 60 நாழி... காலத்திலும் புராணத்திலே... மூழ்கி, மூச்சு விடுவது மு... சகல செய்கையிலும், பேச்... லும், எண்ணத்திலும் அதனை... யே காட்டி வருகின்றீர்கள். இ... படிப்பட்ட மனிதர்களான நீ... கள் புராணப் புரட்டை உண... தவர்களாவீர்களா? புராண ஆபா... சத்தை வெறுத்தவர்களாவீ... களா? நீங்களே யோசித்து... பாருங்கள்.

பாகவதம், இராமாயணம்... பாரதம் முதலிய புராண இதி... காசங்கள் பொய் என்பதை... சைவர்கள் எல்லாரும் ஒப்பு... கொண்டு எதிர்ப்பாட்டுப் பா... ஆய்விட்டது. கந்தபுராண...

## சேர்ந்துவிட்டீர்களா?

திராவிடக் கழகத்தவர் தொகை பெருகுகிறது என்றால் ஆஸ்திக்கவாதிகளின் கொட்டம் அடங்குகிறது என்று பொருள்; இன்பத் திராவிடம் தலை நிமிர்கிறது என்று பொருள்; பாட்டாளிகளின் வாழ்வு, பாலைவனத்திலிருந்து பூந்தோட்டத்திற்குப் பயணம் தொடங்கிவிட்டது என்று பொருள்.

நீங்கள் திராவிடர் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்துவிட்டீர்களா? இல்லையானால் உடனே சேருங்கள்.

**குறிப்பு:**—சென்னை பவழக்காரத் தெரு, 147-ம் எண்ணுள்ள போர்வாள் அலுவலகத்திலும் உறுப்பினர்கள் பதிவுபெறலாம்.

ய புராணம், திருவிளை
ற் புராணம் முதலியவைகள்
ப் என்று வைணவர்கள்
லோரும் ஒப்புக்கொண்டு
டியும் முதலுமாய்த் திருப்
கொடுத்தாய் விட்டது. இவ்
கூட்டத்திலும் பகுத்தறி
ா மக்கள் பொதுவாக
வ யெல்லாவற்றையும்
ய்யென்று சொல்லி அக்
ாலங்களைக் கசக்கிபவண்ண
இருக்கிறார்கள்.

ப்படியிருக்க, இப்படிப்
ஆபாசப் புளுகுக் களஞ்சி
ளாகிய புராணங்களில்
க்கின்ற கதைகளைச் சேர்ந்த
ுபிரக்கணக்கான சம்பவங்
ல் ஒன்றாகிய தீபாவளிப்
டிகைக்காக மாத்திரம் மக்
இந்த நாட்டில், இந்தக்
த்தில், இவ்வளவு பாராட்டு
ம், செலவு செய்தலும்,
ண்டாடுதலும் செய்வதென்
அது எவ்வளவு பெரிய
நனம் என்பதை வாசகர்கள்
முடிவு செய்யவேண்டும்.

பாவளிப் பண்டிகையின்
யில் வரும் பாத்திரங்கள்
று. அதாவது, நரகாசூரன்,
ிணன், அவனது இரண்
து பெண்சாதி யாகிய சத்
ாமா ஆகியவர்களாகும்.

க் கதையைச் சிறிது பகுத்
வுக் கண்கொண்டு பார்ப்பார்
யானால், எவரும் இது ஆரி
திராவிடர்போர் என்பதை
து அறிந்து கொள்வார்கள்.
விடர்களைத்தான் ஆரியர்கள்
கள், அசுரர்கள், அரக்கர்
என்று வழங்கி வந்தார்கள்
பதை பகுத்தறிவும் சரித்திர
ய்ச்சியும் கொண்ட மக்கள்
ரும் ஒப்புக் கொண்டாய்
து. ஆரியர்கள் வருகைக்கு
வாழ்ந்த மக்கள் திராவிடர்
ஆரியர்கள் வரவை திரா
கள் எதிர்த்தார்கள். தங்
எதிர்த்த திராவிடர்களை

ஆரியர்கள் அசுரர்கள்—அரக்கர்கள் என்று அழைத்து வந்திருக்கிறார்கள். திராவிடர் தலைவர்களையே அசுரத் தலைவர்கள் என்று பெயர்வைத்து அழைத்து அவர்களைக் கொடுமை செய்த வரலாறுகளைத்தான் ஆரியர்கள் மிகைப்படுத்திப் பெருக்கி இதிகாசங்கள், புராணங்களாக ஆக்கி வைத்திருக்கிறார்கள்; அத்தகைய வரலாறுகளை மானமுள்ள திராவிடர்கள் வெஞ்சினம் கொள்வதை விட்டு அதைக் கொண்டாடலாமா?

'தென்னிந்திய உற்சவங்கள்' என்ற புத்தகம் தோழர் பி. வி. ஜகதீச அய்யர் என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்திற்கு, சர் பி. எஸ். சிவசாமி அய்யர், டி. வி. சேஷகிரி அய்யர் போன்றவர்கள் மதிப்புரை எழுதியிருக்கிறார்கள். அப்புத்தகத்திலே 152-ம் பக்கத்திலே தீபாவளியைக் குறித்து எழுதப்பட்ட கட்டுரையில்,

"நரகாசூரன், ஒரு அசுர மன்னர். அவர் வங்காள மாகாணத்தில் இருந்துகொண்டு பரந்த நாட்டை அரசாண்டுவந்தார். அவர் ஒரு பெரிய விஷ்ணு பக்தர்"

என்பதாகக் காணப்படுவதிலிருந்து திராவிடர் தலைவர் என்பது விளங்கவில்லையா? மற்றும் இவர், திராவிடநாட்டு மன்னர் என்பதற்கு, இவரது தலை நகரம் நர்மதையாற்றோரம் உள்ள மாகிஷ்மதி என்பதாக பாரதத்தில் இருந்து எடுத்து 'அபிதான சிந்தாமணி' 1284-ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட திராவிட நாட்டில் அரசு செலுத்திய நரகாசூரன் என்பவன் திராவிட மன்னனாய் இருக்காமல் வேறு யாராய் இருக்கமுடியும்?

ஆகவே, இப்பண்டிகை திராவிட மன்னரைக்கொன்று ஆரிய ஆதிக்கத்தை நிலை நிறுத்திய வரலாற்றைக் கொண்டாடுவதாகும். இதற்கு ஒப்புக் கூறவேண்டுமானால் இது ஜார் அரசரை குடும்பத்தோடு கொன்று சமதர்மம் ஏற்படுத்திய நாளை மேதினமாகக் கொண்டாடுவது போல், திராவிட சமதர்ம ஆட்சியை ஒழித்து ஆரிய ஆதிக்கம் ஏற்படுத்திய நாளைக் கொண்டாடுவதாகும். இதைத் திராவிடர்கள் கொண்டாடலாமா?

எந்த மனிதனாவது, கடுகளவு மூளையிருந்தாலும், தீபாவளிக்கும் நமக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டு என்றாவது, அதற்காக நாம் இம்மாதிரியான ஒரு பண்டிகை தீபாவளி என்று கொண்டாட வேண்டுமென்றாவது ஒப்புக்கொள்ள முடியுமாவென்று கேட்கிறேன்.

எப்படியானாலும் இந்த வருஷம் தீபாவளிப் பண்டிகை என்பதை உண்மையான தமிழ் மக்கள் திராவிடர்கள் என்பவர்கள் கண்டிப்பாய் அனுசரிக்கவோ, கொண்டாடவோ கூடாது என்றே ஆசைப்படுகிறேன்.

அன்றியும் இத்தீபாவளிக் கதை எவ்வளவு பரிகாசத்திற்கு இடமாயிருக்கிறதென்பதை உணரும் பொருட்டு அதனையும் கீழே தருகிறேன்.

## தீபாவளியின் கதைச் சுருக்கம்

ஆதிகாலத்தில் நரகாசூரன் என்று ஒரு அசுரன் இருந்தானாம். அவன் விஷ்ணு இரண்யாட்சனைக் கொல்ல அவதாரமெடுத்த பன்றி உருவத்திற்கும் பூமிக்கும் பிறந்தவனாம்.

அவன் தேவர்களையெல்லாம் பலவாறு தூஷித்து இம்சித்து வந்தானாம்.

தேவர்கள் இதைப் பற்றி அவன் தகப்பனாகிய திருமாலிடம் முறையிட்டார்களாம்.

உடனே திருமால் நரகாசூரனைக் கொல்லுவதாக வாக்களித்தாராம்.

அதற்காக வேண்டி திருமால் கிருஷ்ணனாகவும், 'பூமிதேவி' சத்தியபாமையாகவும் அவதாரமெடுத்து உலகத்துக்கு வந்து நரகாசூரனைக் கொன்றுவிட்டார்களாம்.

நரகாசூரன் சாகும்போது தான் செத்த தினத்தை உலகத்தார் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக் கொண்டானாம்.

கிருஷ்ணன் அப்படியே ஆகட்டுமென்று வாக்களித்தாராம்.

அதற்காக வேண்டி மக்கள் எல்லோரையும் கொண்டாடும்படி கடவுள் செய்து விட்டாராம்.

ஆதலால் நாம் கொண்டாடுகிறோமாம்; அல்லது கொண்டாடவேண்டுமாம்.

இதை நமது பகுத்தறிவுக்குப் பொருத்திப் பார்ப்போம்.

முதலாவது இந்தக் கதை உண்மையாய் இருக்கமுடியுமா? "எல்லா உலகங்களையும் உண்டாக்கிய நான்முகனைப் பெற்றவரும் உலகங்களையெல்லாம் காத்துவருபவரும் தேவர்கள் தலைவருமாகிய திருமாலு"க்கும் பூமி'தேவி'க்கும் பிறந்தவன் அவன் எப்படி அசுரன் ஆனான்? அத்தகைய மேம்பாடுடைய கடவுளுக்குப் பிறந்தவன் எப்படி தீய செயல்களைச் செய்தான்? அப்படித்தான் செய்தாலும் அவனைப் பெற்றவனாகிய திருமால் தனது மகனைத் திருத்தாமல் ஏன் கொன்றான்? அப்படியிருந்தாலும் தானே வந்துதான் கொல்ல வேண்டுமோ? மேற்படி நரகாசுரனைக் கொன்றபோது அவன் தாயாகிய பூமி தேவியும் சத்தியபாமையாகப் பிறந்து உடனிருந்ததாகக் கதை கூறுகிறது. என்னே தாயின் கருணை! இவள்தான் உலகத்தையெல்லாம் காப்பாற்றுகிறாளாம்! உலக மக்கள் செய்யும் பாவங்களையெல்லாம் பொறுத்துக் கொள்ளுகின்றாளாம்! பொறுமையில் "பூமிதேவிபோல் என்று உதாரணத்திற்குக்கூட பண்டிதரும் பாமரரும் இந்த "அம்மையாரை" உதாரணமாகக்கூறி வருகின்றனரே! இத்தகைய பூமிதேவியார் தனது மகனைக் கொல்லும்போது தானும் உடனிருக்க வேண்டுமென்று திருமாலைக் கேட்டாராம்! என்னே தாயின் கருணை!! ஆரியருக்குத் தாயேது மகளேது மனைவியேது என்பது இதுபற்றித்தானோ?

தமிழர்களாகிய நம்மையே அசுரர்களென்றும் ஆரியர்களாகிய பார்ப்பனர்கள் தாங்களே தேவர்களென்றும் கற்பித்துக் கதை கட்டியிருக்கிற இந்தக் கதையைத் தமிழ் மக்களாகிய நாமே கொண்டாடுகிறோம்! நாமே சிறந்த நாளாகக் கருதுகிறோம்! நாமே பணம் காசு செலவு செய்கிறோம். ஆரியர் இப்பண்டிகையால் பலவிதத்தில் இலாபமடைகிறார்கள். அந்தோ என் செய்வது? நம்மை ஏமாற்றி நம்மையே பழி வாங்கும் [...] பனர் கட்டுக்கதையை உ[...] யென நம்பி நாமே கொ[...] வீண் செலவு செய்வதெ[...] நமது சுயமரியாதையை [...] னென்பது? நமது பகுத்[...] என்னென்று சொல்வது? [...] சமுதாயம் ஒரு மான[...] சமுதாயமாகுமா? நம்மவ[...] டின் கவர்னர், மந்திரி [...] பார்த்தால் மட்டும் போது[...]

புராணங்களில் கண்டவ[...] யெல்லாம் ஒப்புக்கொண்[...] பகுத்தறிவையிழந்து இ[...] தீபாவளியைக் கொண்[...] நமது தமிழ் மக்களின் அ[...] மையை என்னென்று கூற[...] இனி இயற்பகை நாயனா[...] டிகை கொண்டாடவேண்[...] தான் பாக்கி போலும்!

சென்றது போக, இனி[...] கொண்டாவது தீபாவளி[...] அர்த்தமற்ற மூடப்பழக்[...] நம் தலையில் நாமே மண்[...] போட்டுக்கொள்ளும் செ[...] குறித்து ஒரு காசாவது, [...] நிமிஷநேரமாவது செலவு[...] வேண்டாமென்று திராவிட[...] களாகிய உங்களை மீண்டும்[...] டுக் கொள்கிறேன்.


போர்வாள்

# பொங்கல் மல[ர்]

விலை அணு 8

சிறந்த கதைகள், கட்டுரைகள், கவிதைகள் கொண்டது.

அழகிய அமைப்புடையது.

விற்பனையாளர்கள் தேவையான படிகளுக்கு[...] படிக்கு 4 அணு வீதம் முன் பணம் அனுப்பி[...] பதிந்து கொள்ளவும்.

சொற்ப படிகளே அச்சிடப் படுகின்றன[...] ஆதலின் வேண்டுவோர் உள்ளூர் விற்பனையா[...] ரிடமோ, அல்லது நேரில் எம்மிடமோ பதிந்[...] கொள்வது நல்லது.

ம் பக்கத் தொடர்ச்சி)
கிபாருக்கும் அவருடைய
டர்களுக்கும் இடையே
ஆழமான அகலமான
இரகசியமல்ல இன்று—
ர்க்கும் தெரிந்துவிட்ட
ம. சிலர் பள்ளம் இல்லை
வாதாடுகின்றனர்; சிலர்
இருக்க முடியாதே
தத்துவம் பேசுகின்றனர்;
பள்ளம் இருப்பதாகக்
தே எதிரிகள் கட்டிவிட்ட
என்று சாதிக்கின்றனர்.
இச் "சிலர்" உட்பட
ருமே பள்ளம் இருக்
—தாண்ட முடியாத அள
அகலமாகவும், தவறி
ால் தப்ப முடியாத அள
ஆழமாகவும் இருக்கிறது
தை அறிந்துவிட்டனர்.
கின்றனர் சிலர் துணிந்து!
வதில்லை பலர் பயந்து!
உள்ளத்தில் உணராதவர்
சிலரே. அந்தச் சிலர்
கும் பண்பே அற்றவர்கள்;
உணர முடியாதவர்கள்.
மற்ற பெரும்பாலோர்
ந்துவிட்டனர் உண்மையை
றவர்கள் மட்டுமல்ல,
யாரே உணர்ந்திருக்கிறார்
மையை. உணர்ந்ததால்
இந்தக் கிழமை வெளி
ஹரிஜனில் அவர் தீட்டி
ர் கட்டுரை நான் ஓர் செல்
ாசு என்று!
என்னை நான் மிக்க
லாவணி உடையதோர்
ாயம் என்று இதுவரை
ண்ணியிருந்தேன்.
ல் நான் ஓர் செல்லாத
என்பது இப்போது
ாகத்தெரிந்துவிட்டது.
பேச்சு வெறும் காட்
கூச்சலாய் விட்டது.
த யாரும் கேட்கக்
ணும்!"
வளவோ மன வேதனை
தான் காந்தியார் இச்
ருடர்களை வரைந்திருப்
உள்ளம் நொந்துதான்

இதை எழுதியிருப்பார். இருக்காதா வேதனை? தான் கட்டி வளர்த்த காங்கிரஸ் தன்னை மீறி போகக் கண்டால், தன்னுடைய தொண்டர்கள் தன் பேச்சைத் தட்டி நடக்கக் கண்டால், தன்னைப் போற்றிப் புகழ்ந்த தலைவர்கள் வேறு பாதை செல்லக் கண்டால், காந்தீயம் தன் கண் முன்னாலேயே மங்கி மறையக் கண்டால் வேதனை ஏன் இருக்காது?

**நான் ஓர் செல்லாத காசு** நான்கு சொற்கள் அல்ல இவை, காந்தியார் கண்ணீர்! அவர்தம் உள்ளத்தின் உள்ளிருந்து உருண்டோடி வரும் மனவேதனை விளக்கங்கள்!

"முன்னே யெல்லாம் இருந்ததுபோல, இன்று, கதர், அஹிம்சா தத்துவத்தின் பரிபூரணச் சின்னமாயில்லை. கத்தியவாரில் மட்டுமல்ல, இந்தியாவின் எந்தப் பகுதியிலுமே மக்களுக்குக் கதரிலோ அஹிம்சையிலோ உண்மை நம்பிக்கையில்லை என்பது இப்போது நன்றாகத் தெரிந்துவிட்டது. அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபாடுடைய ஒரு சிலர் கதரை ஆதரிக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுக்குக் கதர்மீதுள்ள பற்று அல்ல; அது பழக்கத்தில் இருக்கிறது என்பதுதான்."

—காந்தியார் வாசகங்கள்இவை. கத்தியவாரில் கதர் பக்தி குறைந்துவிட்டது; பல தேசியத் தோழர்கள் இந்தப் பகுதிகளில் அஹிம்சையால் என்ன பயன் என்றே கேட்கின்றனர்; இதைப் பற்றி உங்கள் கருத்தென்ன என்று கத்தியவார் பகுதியைச் சேர்ந்த தோழர் ஒருவர் கேட்ட கேள்விக்கு விடை கூறும் போதுதான் காந்தியார் இவ்வாறு எழுதி இருக்கிறார்.

காங்கிரஸ் கூடாரத்தில் உள்ள மக்களுக்கு—மக்களுக்கு என்றால் தொண்டர்களுக்கு மட்டு மல்ல, நேரு, படேல், கிருபாளினி போன்ற தலைவர்களுக்கும் கூடத்தான்—கதரில் நம்பிக்கை இல்லை; அஹிம்சா தத்துவத்தில் பற்று இல்லை; காந்தி போகும் பாதையில் கருத்து இல்லை; காந்தீயம் வெல்லும் என்ற எண்ணமில்லை; அவர் வகுக்கும் திட்டங்கள் வன்மை படைத்தன என்ற நினைப்பு இல்லை; ஆகவே அவரைப் பின்பற்ற முடியவில்லை; ஆனால் அவர்மீதுள்ள பற்றோ அணுவும் குறையவில்லை. ஏன் இந்த விபரீதமான நிலை வந்தது? மக்கள் அவரைப் போற்ற முடிகிறது ஆனால் பின்பற்ற முடியவில்லை, இது ஏன்?

இது நம் சிந்தனைக்குரியது. நம் சிந்தனைக்கு மட்டுமல்ல; காந்தியார் சிந்தனைக்கும் உரியது.

காந்தியார் பழமையில் அசையாத பற்றுடையவர். எனவேதான் கதர், கைராட்டை, கருப்பட்டி வெல்லம், கைக்குத்து அரிசி, பனை ஓலை என்று பழைய அந்தாதியையே திரும்பத் திரும்ப வாசிக்கிறார். இயந்திரங்கள் கூடாது என்கிறார்; மிஷின்கள் இருப்பது பாவம் என்கிறார்; நெசவாலைகள் எழுவது நஞ்சுண்பது போல்வது என்கிறார். அவர் புதிய புதிய விஞ்ஞான உற்பத்திச் சாதனங்களில் உற்சாகம் காட்டுவதில்லை. கவைக்குதவாத கதரிலும் காட்டுமிராண்டிக் காலத்துச் சாதனங்களிலுமே நம்பிக்கை காட்டுகிறார். காந்தியார் கருத்துப்படி நாம் வாழ்வதானால் நாட்டிலே உள்ள இயந்திரங்கள் அத்தனையையும் எடுத்துக் கடலில் எறிந்துவிடவேண்டும், அல்லது வேற்று நாட்டிற்கு விற்றுவிட வேண்டும்; அவரவர்களே தம் கையில் நூற்று கைராட்டையில் நெய்ய வேண்டும். அவரவர்கள் தத்தம் வீட்டுப் புறங்களில் பயிர் பச்சைகள் அமைத்து காய்கறிகள் பயிரிடவேண்டும். எழுதுவதற்குப் பேனா வேண்டுமானால் இறகு பேனா எடுத்துக்கொண்டு மசிக்கூட்டில் தோய்த்தெடுத்து எழுதவேண்டும். படிப்பதற்குப் புத்தகம் வேண்டுமானால் ஓலைச் சுவடி எடுத்து, எழுத்தாணியால் தீட்டி, திருப்பித் திருப்பி வாசிக்கவேண்டும். இயந்திரங்கள் இல்லாவிட்டால் நெல் குத்த முடியாதே என்றால் கைக்குத்து அரிசியைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். சர்க்கரை ஆலைகள் கூடாது; கருப்பட்டி வெல்லம் பயன்படுத்தப் பட வேண்டும். அதற்கு ஈடாக பத்திரிகைகளுக்குக்கூட முரட்டுத் தாளை

யினும் கைக் காகிதம்தான் பயன் படவேண்டும் — மெஷின் காகிதம் கூடாது, சினிமாவா—அது கிடையாது அவருடைய உலகில்! (ஏனெனில் அது இயந்திரங்களின் துணையின்றிக் காட்டப்பட முடியாதல்லவா) அதற்குப் பதில் நாடகம் பார்க்கலாம்; இயற்கைக் காட்சிகளைக் காணலாம்...... இது காந்தியார் காணும் கனவு. இந்தக் கனவுலகக் காட்சிக்கேற்ற தத்துவங்கள், இலட்சியங்கள், நடை முறைகள், சின்னங்கள், அமைப்பு முறைகள் கொண்டதே காந்தீயம். கி. மு. 1947-ல் அதை அனைவரும் பின்பற்றியிருக்கலாம் எளிதில். ஆனால் கி. பி. 1947-ல் அது சாத்தியமில்லை. இது விஞ்ஞான காலம். இயந்திர காலம். ஒவ்வொரு வேலையையும், ஒவ்வொரு உழைப்பையும் சுருங்கிய காலத்தில் நடத்தி முடிப்பதற்கான இயந்திரங்களை விஞ்ஞானிகள் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கும் காலம். எல்லாப் பொருள்களையுமே எவ்வளவுக் கெவ்வளவு நிறைந்த அளவில் எவ்வளவுக் கெவ்வளவு சுருங்கிய செலவில் உற்பத்தி செய்ய முடியும் என்று போட்டி போட்டுக் கொண்டு விஞ்ஞானிகள் கருவிகளும் முறைகளும் வகுக்கும் காலம். எனவே இக் காலத்தில் காந்தீயம்-இயந்திரங்களே கூடாது என்று கூறும் வாழ்க்கைத் தத்துவம் வெற்றி பெறாது. இயந்திரங்களின் துணையின்றி நாம் வாழ்ந்தோம் ஒரு காலத்தில். உண்மைதான் ஆனால் இனி இயந்திரங்களின் துணையின்றி நாம் ஒரு கணமும் இருக்கமுடியாது. ரேடியோ சினிமா தந்தி, கம்பியில்லாத் தந்தி, வானூர்தி, கப்பல், மோட்டார், ரயில, டெலிவிஷன், நிழலுருவப் படம், மையூற்றுப் பேனா, பஞ்சாலைகள், ஒரே சமயத்தில் ஐந்து நிறம் ஆறு நிறம் கொண்ட படங்களை அச்சியற்றும் அச்சுப் பொறிகள், மணிக்குப் பதினாயிரம் பத்திரிகைகளை எழுத்துப் பொறுக்கி அச்சடித்து மடித்துக் கட்டி வெளியே தள்ளும் இயந்திரங்கள் மின்சார சக்தி, அணுச் சக்தி-இவை இயந்திரங்களில் பிறக்கும் பயன்படு பொருள்களில் ஒரு சில. இவற்றின் துணையின்றி நாம் வாழ முடியுமா? முடியும் என்கிறது காந்தீயம்; முடியாது என்கிறது பகுத்தறிவு.

பழைய காலத்திற்குப் போகலாம் என்கிறது காந்தீயம். இல்லை வேண்டாம்—புதுக் காலத்திற்குச் செல்வோம் — வருக என்கிறது பகுத்தறிவு. இயந்திரமின்றி வாழ முடியும் என்கிறது காந்தீயம். அந்தக் காட்டுமிராண்டி வாழ்வு வேண்டாம் என்கிறது பகுத்தறிவு. இரண்டில்மக்கள், எந்த உரையைப் பின்பற்றுவர்; காந்தீயத்தையா, பகுத்தறிவையா? சந்தேகமின்றி பகுத்தறிவைத்தான்.

காந்தீயம், காந்தியாரால் கூறப்படாமல் வேறு எவராலேனும் கூறப்பட்டிருந்தால், உடனே துளியும் தாமதமின்றி மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டிருக்கும். ஆனால் இன்று அதைச் சொல்பவர் காந்தியார், காந்தியாரோ தூங்கிக் கிடந்த இந்தியாவைத் தட்டி எழுப்பியவர்; ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்கும் வல்லமையை, உரத்தை, நெஞ்சுத் தைரியத்தை இந்தியருக்கு அளித்த அண்ணல். ஆகவே போற்றுதலுக்குரியவர். காந்திமீதுள்ள பக்தி தேசீய வாதிகளை காந்தீயத்தை ஆதரிக்கச் சொல்கிறது. ஆனால் பகுத்தறிவு விஞ்ஞானத்தின் பக்கம் அவர்களைப் பிடித்துத் தள்ளுகிறது. என் செய்வார் பாவம்! தர்ம சங்கடமான நிலை அவர்களுக்கு! சிந்தித்துச் சிந்தித்துப் பார்க்கின்றனர், இறுதியில் விஞ்ஞானத்தின் பக்கம்தான் போகின்றனர் - அதாவது காந்தீயத்திற்கு எதிர்ப் பக்கம்! வேறு எப் பக்கம் போக முடியும்?

விஞ்ஞானப் பாதையில் கொஞ்ச தூரம் சென்றதும், இது காந்தி வழி அல்லவே என்று உணர்கின்றனர். காந்தி கருத்துக்கு மாறான நிலைமைகளும் எண்ணங்களும் ஏற்பாடுகளும் தம் வழியில் தட்டுப்பட்டு காண்கின்றனர். கண்டதும் திகைக்கின்றனர். திக்பிரமை அடைகின்றனர்.

திகைப்பும் திக்பிரமையும் அடைகின்றனரே தவிர, வந்த வழியை விட்டு விட்டு, காந்தீயப் பாதையில் செல்ல மனமில்லை அவர்களுக்கு. எப்படி இருக்கும்? விஞ்ஞானத்தின் ருசியும் பசையும் பலனும் பண்பும் கண்டபிறகு காந்தீயம் எனும் பழைய பலனற்ற பாதையில் செல்ல எப்படி மனம் வரும்? மனம் வரவில்லை. எனவே அவர்கள் விஞ்ஞானப் பாதையிலேயே மேலும் மேலும் செல்கின்ற

காண்பவர் எவரேனும் "எ
இது நீவிரும் வழி தவறிச்
கின்றீரே! காந்தி வகுத்த
ஈதல்லவே?" என்று கேட்
தாம் போகும் பாதை சரி
பாதை என்பதைக் காட்ட
சொல் வீசுகின்றனர். அச்
கள் அவர்களையும் அறியா
காந்தீயக் கருத்துக்களைத்
தெறியும் டார்ப்பிடோக்க
மாறிவிடுகின்றன. அவற்
சிலவே இக்கட்டுரைத் துவக்க
நாம் பொறித்துள்ள வாசக

பரங்கியர் ஆட்சியை — நம்
நாம் ஆளாவண்ணம் தடைவி
வெள்ளை ஏகாதிபத்தியத்தை
துக் கட்டினார் காந்தியார்.
வரையில் அவர் சொல்வழி
னர் காங்கிரஸ்காரர்கள். அவ
தான் அந்த அரும்பணியை
முடியும் என்றெண்ணி
எனவே அவர் ஆட்டும் சுட்டு
கண்டு, அதன் ஆணைக்கு அ
கினர். ஆனால் இனி, பெ
விடுதலையைக்கொண்டு புதிய
யாவை நிர்மாணித்தல் அவ
ஆகாத செயல் என்று என்
கின்றனர். எனவேதான்
முதலான அவருடைய தி
களைத் தாக்குகின்றனர். அவ
போற்றிப் புகழ்ந்துகொண்
தான், அவருடைய திருநாமத்
பஜித்துக்கொண்டேதான், வா
நாமாவளி வாசித்துக்கொண்
தான் அவருடைய திட்டங்க
தாக்குகின்றனர். அவை உ
துப்போன பழைய திட்டங்
எனவேதான் கொஞ்சம் அசை
வுடனேயே பொல பொல வென்
உதிர்ந்து போகின்றன.

காண்கிறார் காந்தியார்; உள்
குமுறுகிறார்; நான் ஓர் செல்
காசு ஆனேனே! என்று ெ
கிறார்; காட்டுக் கூச்சலாய்
என் குரல் என்று வருந்துகி
என் செயலாம்? அவர் இருப்
கண்ணாடி மாளிகை. கல் 
தால் அது உடையத்தான்
யும், அதற்கு வருந்தி ஆவதென்
விஞ்ஞான மாளிகைக்குச் ெ
பகுத்தறிவுப் பலகணியை உ
வேண்டும் காந்தியார். உயர்ந்
அனைவரும் அவர் பின் சே
காசும், செல்லும் காசாகும்.
வாரா காந்தியார்?

———

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
Madras. Joint Editor, M. Ilanchelivan B.A.(H